ශ්‍රී ලංකා රක්ෂණ නියාමන කොමිෂන් සභාව
இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு
INSURANCE REGULATORY COMMISSION OF SRI LANKA

INSURANCE REGULATORY COMMISSION OF SRI LANKA

11 වන මහල, නැගෙනහිර කුළුණ
ලෝක වෙළඳ මධ්‍යස්ථානය
කොළඹ 01, ශ්‍රී ලංකාව.

11ம் மாடி, கிழக்கு கோபுரம்
உலக வர்த்தக மையம
கொழும்பு 01, இலங்கை.

Level 11, East Tower
World Trade Centre
Colombo 01, Sri Lanka.

+94 11 2396184-9
+94 11 2396190
www.ircsl.gov.lk

# செய்தி வெளியீடு

15.06.2023

## குறிப்பிட்ட காப்புறுதி வகைகளின் மீது கழிவுகளை வழங்கி, பொது மக்களுக்கு கட்டணத்திற்கு கழிவு அட்டைகளை விற்றல்

2000ஆம் 43ஆம் இலக்க காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு முரணாக, சில நபர்கள் குறிப்பிட்ட காப்புறுதி வகைகளின் மீது கழிவுகளை வழங்கி, பொது மக்களுக்கு கட்டணத்திற்கு கடவு அட்டைகள்/ கூப்பன்கள், அட்டைகள்/ கழிவு அட்டைகளை விற்பதில் ஈடுபட்டுள்ளதாக இலங்கை காப்பறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டள்ளது.

அதனால், இலங்கை காப்பறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, அந்த கடவு அட்டைகள்/ கூப்பன்கள், அட்டைகள்/ கழிவு அட்டைகளை கொள்வனவு செய்ய வேண்டாம் என பொதுமக்களைக் கேட்டுக்கொள்கின்றது. அந்த நபர்கள் தொடர்பான தகவல்களை info@ircsl.gov.lk எனும் மின்னஞ்சல் முகவரியின் ஊடாக இலங்கை காப்பறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவிற்கு வழங்குமாறு பொதுமக்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

அதனால், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழு, இத்தால் காப்புறுதிப் பூட்கைகளை பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் அல்லது பதிவுசெய்யப்பட்ட காப்புறுதி தரகர் கம்பனிகள் அல்லது காப்புறுதிக் கம்பனிகளின் மற்றும்/அல்லது காப்புறுதித் தரகர் கம்பனிகளின் அதிகாரம்பெற்ற காப்புறுதி முகவர்களிடமிருந்து மட்டும் பெற்றுக்கொள்ளுமாறு வலியுறுத்துகின்றது.

பதிவுசெய்யப்பட்ட காப்புறுதிக் கம்பனிகள் மற்றும் காப்புறுதி தரகர் கம்பனிகளின் விபரங்கள் இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவின் இணையதளத்தில் www.ircsl.gov.lk உள்ளது.